HUNTSMAN

Enriching lives through innovation

நாணயம்





நேர்மை



மதிப்பு

பொறுப்பு



# HUNTSMAN-ல் பணி • விற்பனையாளர் நடைமுறை விதிகள்

# பொதுவானவை

வர்த்தக நடவடிக்கை சார்ந்த தர அளவுகளை நம் வர்த்தக நடைமுறை வழிகாட்டு நெறிகளில் Huntsman விபரமாக விளக்கி தெரிவித்திருக்கிறது. நாம் நெறிகளாகப் போற்றும் நேர்மை, நாணயம், நன்மதிப்பு மற்றும் பொறுப்புகளை இந்த Huntsman வர்த்தக நடைமுறை வழிகாட்டு நெறிகள் ('வழிகாட்டு நெறிகள்') வரம்பிட்டுக் காட்டுகின்றன. இந்த நெறிகளை முழுமனதோடு ஏற்று பின்பற்றுவதுடன் Huntsman இணங்கி பின்பற்றும் ஒழுங்குமுறை நெறிமுறை விதிகளையும் தன்னுடன் வர்த்தகம் செய்யும் விற்பனையாளர்கள் மதித்து நடந்து கொள்வார்கள் எனவும் நிறுவனம் எதிர்பார்க்கிறது.

Huntsman-னுடன் வர்த்தக உறவில் ஈடுபட்டிருக்கும் விற்பனை நிறுவனங்கள் சுதந்திரமானவை என்றாலும், Huntsman சார்பாக அல்லது அதனுடன் செய்யப்படும் விற்பனையாளர் நடவடிக்கைகளும் செயல்பாடுகளும் நிறுவனத்தையும் அதன் நற்பெயரையும் கனிசமாக பிரதிபலிக்கும். ஆகையால், விற்பனையாளர்கள், அவர்கள் ஊழியர்கள், முகவர்கள், உபஒப்பந்தக்காரர்கள் ("பிரதிநிதிகள்") அனைவரும் நம் நிறுவனத்துடன் அல்லது நம் சார்பாக வர்த்தகத்தில் ஈடுபடும்போது இந்த வழிகாட்டு நெறிகளில் விளக்கப்பட்டுள்ள நமது உயர்ந்த நெறிமுறை தர அளவுகளைப் பின்பற்ற வேண்டும் என்று Huntsman எதிர்பார்க்கிறது.

Huntsman-னின் எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொண்டு பின்பற்றுவது நம் விற்பனை நிறுவனங்கள் மற்றும் பிரதிநிதிகளின் பொறுப்பாகும். ஒரு விற்பனை நிறுவனம் அல்லது பிரதிநிதியின் நடத்தை Huntsman-னின் எதிர்பார்ப்புகளுடன் முரண்படும் வகையில் எந்தச் சூழ்நிலையாவது எழுந்தால் அல்லது எழும்போது, அவர்கள் Huntsman மேலாண்மை உறுப்பினர் ஒருவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஒரு விற்பனை நிறுவனமோ பிரதிநிதியோ இந்த வழிகாட்டுநெறிகளோடு அல்லது எந்த Huntsman கொள்கையோடும் பொருந்தாத வகையில் செயல்படுவதாக நாங்கள் கருதினால் அவர்களை நீக்கும்படி Huntsman கோரலாம்.

### விற்பனை நிறுவனங்களிடமும் பிரதிநிதிகளிடமும் எதிர்பார்க்கப்படும் நடத்தைகள்

Huntsman-னுடன் அல்லது அதன் சார்பாக வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும்போது, அனைத்து விற்பனை நிறுவனங்களும் பிரதிநிதிகளும் தங்கள் வர்த்தக நடத்தைகளிலும் நடவடிக்கைகளிலும் நாணயமாகவும் தத்தம் நாடுகளின் பொருந்தும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றியும் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். Huntsman நிறுவனத்தைப் போலவே தனது விற்பனை நிறுவனங்களும் பிரதிநிதிகளும் பணியிட மனித உரிமைகளிலும் சம வாய்ப்பிலும் கடமை பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. Huntsman-னுடனான விற்பனை நிறுவனத்தின் ஒப்பந்த விதிகள் மட்டுமின்றி, எல்லா விற்பனையாளர்களும் பிரதிநிதிகளும் ஒழுங்கு முறை விதிகளுக்கு இணங்கியிருத்தல், வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் பணியமர்த்தல் உள்ளிட்ட நம் நிறுவன நெறிமுறை தர அளவுகளைக் கடைபிடிக்க வேண்டும். இந்த எதிர்பார்ப்புகளின் விவரச் சுருக்கம் ஒன்று இந்த ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.

**Huntsman வர்த்தக நடத்தை வழிகாட்டுநெறிகளின் முழு உரையை www.huntsman.com என்ற வலைத்தளத்தில் பார்க்கலாம்.**

# I. எதிர்பார்க்கப்படும் ஒழுங்குமுறை இணக்க நடவடிக்கைகள்

### விற்பனை நிறுவனங்களிடமும் அவற்றின் பிரதிநிதிகளிடமும் எதிர்பார்க்கப்படுபவை:

- அவரவர்கள் வர்த்தகம் செய்யும் சட்ட வரம்பு எல்லைகளுக்கு உட்பட்ட நன்னடத்தை மற்றும் நியாயமான போட்டி விதிகளுக்கு இணங்கி தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்;
- அவரவர்கள் நாட்டில் அமலிலிருக்கும் ஊழல் தடுப்பு சட்ட விதிகளுக்கு இணங்கி வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்;
- இன்னொருவருக்கு அல்லது அரசு ஊழியராக அல்லது ஒரு பொது நிறுவனத்தின் ஊழியராக இருக்கும் ஒருவருக்கு அவர் மீது செல்வாக்கு செலுத்தும் நோக்கத்துடன் எந்த நேரடி அல்லது மறைமுக தொகை வழங்குதல் அல்லது முன்மொழியப்பட்ட தொகை வழங்கல் எதுவும் செய்யக் கூடாது, தொகை வழங்கும் ஏற்பாடு செய்யக் கூடாது, மதிப்புள்ள எதையும் அளிக்க முன்வரக் கூடாது;
- பொருந்தும் எல்லா சுற்றுச்சூழல் சட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் பின்பற்ற வேண்டும்;
- ஒழுங்குமுறை அமைப்புகளின் பிரதிநிதிகளோடும் அரசு அதிகாரிகளோடும் நிகழும் கலந்துரையாடல்களில் நேர்மையையும் உண்மையையும் கடைபிடிக்க வேண்டும்;
- Huntsman செயலியக்கங்களின் பல அம்சங்களுக்குப் பொருந்தும் எல்லா பொருத்தமான வர்த்தகக் கட்டுப்பாட்டுச் சட்டங்களையும் பின்பற்ற வேண்டும்; அதோடு,
- Huntsman மீது முறையற்ற புறக்கணிப்பு விதிமுறைகளைச் சுமத்தக் கூடாது.

# II. எதிர்பார்க்கப்படும் தொழில் நடைமுறைகள்

### விற்பனை நிறுவனங்களிடமும் அவற்றின் பிரதிநிதிகளிடமும் எதிர்பார்க்கப்படுபவை:

- அனைத்து வர்த்தக தகவல்களை நேர்மையாகவும் பிழையில்லாமலும் பதிவுசெய்ய வேண்டும், அறிவிக்க வேண்டும்; அவற்றைப் பூர்த்தி செய்தல் மற்றும் துல்லியம் தொடர்பான பொருந்தும் சட்ட விதிகள் அனைத்தையும் பின்பற்ற வேண்டும்.
- Huntsman மற்றும் பிறரின் அறிவுசார் சொத்து உடைமைத்துவ உரிமைகளைப் பின்பற்ற வேண்டும்; காப்புரிமைகள், வர்த்தகச் சின்னங்கள், தொழில் ரகசியங்கள் ஆகியவையும் இதில் அடங்கும்; மென்பொருட்கள், சாதனங்கள், உள்ளடக்கம் ஆகியவற்றை அவற்றுடன் தொடர்புள்ள உரிமம் அல்லது பயன்பாட்டு விதிமுறைகளைப் பின்பற்றி மட்டுமே பயன்படுத்த வேண்டும்;

- Huntsman-னின் பௌதிக மற்றும் அறிவுசார் சொத்துகளைப் பாதுகாத்து பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும்;

  Huntsman-னின் அனுமதியுடன் மட்டுமே இத்தகைய சொத்துகளைப் பயன்படுத்த வேண்டும்;

  Huntsman வழங்கியுள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் சிஸ்டங்களை (மின்னஞ்சல் உள்பட) பிரதானமாக Huntsman வர்த்தகம் தொடர்பான நோக்கங்களுக்காக பொருந்தும் Huntsman விதிமுறைகளைப் பின்பற்றி பயன்படுத்த வேண்டும்;

  விற்பனையாளர்களும் பிரதிநிதிகளும் Huntsman அளிக்கும் சொத்துகள், தொழில்நுட்பம் அல்லது சிஸ்டங்களை (வசதிகளைப்) பயன்படுத்தி, தொல்லை கொடுக்கும், பாரபட்சம் காட்டும், துன்புறுத்தும், வன்முறை தூண்ட அச்சுறுத்தும் அல்லது அது போன்ற முறையற்ற அல்லது சட்டவிரோதமான எதையும் உருவாக்க, அணுக, சேமித்து வைக்க, அச்சிட, ஆதரவு தேட அல்லது அனுப்ப Huntsman நிறுவன விதிமுறைகள் தடை செய்கிறது;

- கடவுச்சொற்கள், ரகசியக்காப்பு, பாதுகாப்பு ஆகியவற்றைப் பராமரிப்பதற்கான Huntsman கட்டுப்பாடுகளைப் பின்பற்ற வேண்டும், Huntsman-னின் அக நிறுவன வலைப்பின்னல், முறைமைகள், கட்டிடங்கள் ஆகியவற்றுக்கு அணுகலைப் பெறுவதற்கான ஒரு நிபந்தனையாக அதன் ரகசியத்தன்மை நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்;

- Huntsman பணியாளர்களுக்கு அன்பளிப்பு அல்லது கேளிக்கைகளை அளிக்க முன்வரும்போது விவேகத்துடன் மிதமான போக்கில் நடந்துகொள்ள வேண்டும்;

  பொதுவாக, விற்பனையாளர்களும் பிரதிநிதிகளும் Huntsman பணியாளர்களுக்கு $50 மதிப்பிற்கு மிகையான எந்தத் தனிநபர் அன்பளிப்பையும் அல்லது கடந்திருக்கும் 12 மாத காலத்தில் கூட்டுத் தொகையில் $125 மதிப்பிற்கு மிகையான அன்பளிப்புகள் அளிப்பதையும் தவிர்க்க வேண்டும்;

  விற்பனை நிறுவனங்களும் பிரதிநிதிகளும் Huntsman வர்த்தக வாய்ப்பைப் பெற அல்லது தக்கவைத்துக்கொள்ள Huntsman பணியாளர் ஒருவருக்கு லஞ்சம், கையூட்டு, அல்லது பண்ட மாற்றுப் பொருள் அல்லது பிரதிபல சேவை அல்லது வேறு ஊக்கப்பொருள் என்று எதையும் ஒருபோதும் வழங்கக் கூடாது;

  இவ்வாறு கொடுக்கப்படும் அல்லது பெறப்படும் எந்த அன்பளிப்பும் அல்லது கேளிக்கையும் சட்ட விதிகளுக்கு இணங்கியும் Huntsman நெறிமுறைகளுக்கு முரண்படாதவாறும் இருக்க வேண்டும்;

- நிஜமான ஒரு ஆதாய முரண்பாட்டை அல்லது ஆதாய முரண்பாடு இருப்பதான தோற்றத்தைக்கூடத் தவிர்க்க வேண்டும்.

  விற்பனையாளர் நிறுவனத்தில் அல்லது விற்பனையாளர் வர்த்தகத்தில் பணியாளராக இருக்கும் அல்லது தனிப்பட்ட அல்லது நிதிசார்ந்த தொடர்பு கொண்டிருக்கும் ஒருவரின் வாழ்க்கைத் துணை அல்லது குடும்ப உறுப்பினர் அல்லது வேறு நெருங்கிய உறவு கொண்டிருக்கும் எந்த ஒரு Huntsman பணியாளருடனும் விற்பனையாளர்கள் அல்லது பிரதிநிதிகள் நேரடியாக வர்த்தக பேச்சுவார்த்தைகளிலோ அல்லது வேறு வர்த்தக விஷயங்களிலோ ஈடுபடக் கூடாது;

- Huntsman அல்லது வேறொரு நிறுவனத்தைப் பற்றி அதில் முதலீடு செய்யும் பொதுமக்களுக்குக் கிடைக்காத, பங்குகளை வாங்குவது அல்லது விற்பது தொடர்பான ஒரு முதலீட்டாளரின் முடிவில் செல்வாக்கு செலுத்தக்கூடிய தகவல் கைவசம் இருக்கும்போது Huntsman அல்லது வேறொரு நிறுவனத்தின் பங்குகளை வாங்குவதன் மூலம் அல்லது விற்பதன் மூலம் உள்வர்த்தகம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்;

- பொருந்தும் எல்லா சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி வர்த்தகப் பதிவுகளை உருவாக்க வேண்டும், தக்கவைத்துக்கொள்ள வேண்டும், அகற்ற வேண்டும்.

## III. எதிர்பார்க்கப்படும் பணியமர்த்தல் நடவடிக்கைகள்

### விற்பனை நிறுவனங்களிடமும் அவற்றின் பிரதிநிதிகளிடமும் எதிர்பார்க்கப்படுபவை:

- பாலியல் அல்லது பிற தொல்லை கொடுக்கும் அல்லது பாரபட்சம் இல்லாத ஒரு பணிசூழலை வழங்கும் Huntsman நிறுவன கொள்கைப் பின்பற்றுதலில் ஒத்துழைக்க வேண்டும்;
- பொருந்தும் அனைத்து பாதுகாப்பு மற்றும் சுகாதார சட்ட விதிகள், ஒழுங்குமுறைகள், நடைமுறைகள் ஆகியவற்றுடன் இணங்கி பாதுகாப்பும் ஆரோக்கியமும் நிறைந்த பணிச்சூழலை உருவாக்க வேண்டும்;
- Huntsman-க்குச் சொந்த அல்லது குத்தகை இடங்களில் சட்டவிரோத மருந்துகளைப் பயன்படுத்தல், வைத்திருத்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல் ஆகியவை தடை செய்யப்படுகின்றன;
- தன்னார்வ உழைப்பை மட்டுமே பயன்படுத்த வேண்டும்; கொத்தடிமை உழைப்பு அல்லது வேறு வடிவிலான கட்டாய உழைப்பு தடை செய்யப்பட்டுள்ளது;
- ஊதியம், வேலைநேரம், குறைந்தபட்ச பணிபுரியும் வயது ஆகியவற்றுக்கான உள்ளூர்ச் சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் அனைத்தையும் பின்பற்ற வேண்டும்; சிறார் உழைப்பு தடை செய்யப்பட்டுள்ளது; அதோடு,
- பணியாளர் பதிவேடுகளை உள்ளூர் மற்றும் தேசிய ஒழுங்குமுறை விதிகளின்படி பராமரிக்க வேண்டும்.

### அக்கறைகளைத் தெரிவித்தல் மற்றும் உதவி கோருதல்

ஒரு சூழ்நிலையைக் குறித்த அக்கறை ஒரு விற்பனையாளர் அல்லது பிரதிநிதிக்கு ஏற்பட்டால், அல்லது ஒரு பிரச்சினை அல்லது கவலையை தெரிவிக்க விரும்பினால் முதல்நிலை Huntsman தொடர்பாளர் ஒருவரிடம் வர்த்தக நடவடிக்கை அல்லது இணக்க குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட ஊக்குவிக்கப்படுகிறார்கள். இருந்தாலும், இது சாத்தியமாகவோ முறையானதாகவோ இல்லாமல் போகலாம் என்ற யதார்த்த நிலையையும் Huntsman புரிந்துகொள்கிறது. இது போன்ற சூழலில், ஒரு விற்பனையாளர் அல்லது பிரதிநிதி பின்வருவனவற்றைச் செய்யலாம்:

- Huntsman எதிக்ஸ் அண்ட் கம்ப்ளையன்ஸ் துறையை +1.281.719.6000 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.
- Speak Up தொலைபேசி உதவிப் பிரிவை அழையுங்கள்; இதை www.huntsman.com/speakup என்ற வலைத்தளத்தில் அணுகலாம், அல்லது
- எதிக்ஸ் அண்ட் கம்ப்ளையன்ஸ் துறைக்கு ethics@huntsman.com என்ற முகவரியில் மின்னஞ்சல் அனுப்பலாம்.

மற்றவருக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகளை Huntsman நிறுவனம் சகித்துக்கொள்வதில்லை. சந்தேகிக்கப்படும் எந்த சட்ட அல்லது கொள்கை மீறலையும் நல்லெண்ணத்துடன் தெரிவிக்கும் யாரும் அத்தகைய செயலுக்காக பழிவாங்குதலுக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தனக்குத் தெரிந்த அனைத்து விபரங்களுடன் உண்மையான அக்கறையுடன் முழுமையான செய்திகளை அளிக்க முன்வரும் ஒருவர் நல்லெண்ணத்துடன் நடந்து கொள்கிறார் என்று கருதப்படும்.

HUNTSMAN

Enriching lives through innovation

**Global headquarters**
Huntsman Corporation
10003 Woodloch Forest Drive
The Woodlands
Texas 77380
USA
Telephone +1 281 719 6000
Fax +1 281 719 6416

www.huntsman.com

Copyright © 2017 Huntsman Corporation or an affiliate thereof. All rights reserved.

The use of the symbol ® herein signifies the registration of the associated trademark in one or more, but not all, countries.